Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 8898

Date of Permit 31.12.2014 (~~10.3.~~)

B/SPL-BLDG/ 290/ 2014

Premium-FSI

File No. B2/ 3946 /14

Name of Applicant with Address. Mr. R. GOPAL (GPA) M/s Acchyuthan Builders New No 22, old No 15, Saraswathi Street, Mahalingapuram, Chennai-24

Date of Application 10.3.2014

Nature of Development : ~~Layout/Sub division of Land~~/Building construction/~~Change in use of Land/Building~~

Proposed construction of Stilt + 4 Floors Residential

Site Address building with 12 DU at plot Nos: 86 & 87 Door No 9, 2nd Main Road, T.T.K. Nagar, Tambaram,

Division No. Chennai - 45 Comprised in old S.No 60/part & 5pt of Irumbuliyur village (as per Doc) present T.S.Nos 6 & 7, Block No.5, ward-E of Tambaram Town (as per TSLR Extract) within Tambaram Municipality limit.

Development Charge paid Rs. 25000/- Challan No. 1525 Date 24.7.2014

PERMISSION is granted to the ~~layout/sub division of land~~/ building construction/~~change in use of land~~/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 30.12.2017

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

5/1/2015

For MEMBER SECRETARY

31.12.14

## CONDITIONS

Note: 1. According to Section 79 of the T. & C. P. Act 1971 (Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision of order of the Planning Authority Under section 49 or sub section (1) of section 54 may appeal to the Government within Two months from the date on which the decision or order was communicated.

2. The Member Secretary, Chennai Metropolitan Development Authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either on wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse of procedural formalities to be followed or permit having been obtained by any fraudulent manner.

ந.ம.எண்: 15/15 — தாம்பரம் நகராட்சி
ந.அ.எண்: 194/15 — நாள்: 6.5.2015

For COMMISSIONER,
TAMBARAM MUNICIPALITY

# தாம்பரம் நகராட்சி

## கட்டிட அனுமதி உத்திரவு

கோ.மு.எண் : 15/15 உ.ஆணை எண் : 194/15 நாள் : 06/05/2015

பொருள் : கட்டிட அனுமதி தாம்பரம் நகராட்சி நகரளவு எண் 6 & 7
பகுதி 5 தொகுதி. E கதவு / மனை எண். 86&87
மனை கட்டிட அனுமதி வழஙகி உத்திரவிடுதல் சம்பந்துமாக.

பார்வை : திரு/திருமதி. ஆர்.கோபால்
என்பவரது 15/04/2015 ம் தேதிய விண்ணப்பம்.

மனை கட்டிடத்தின் பரப்பளவு

புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டிடம்

செலுத்தப்பட்ட கட்டணஙகளின் விபரம் பின் வருமாறு

| | தொகை ரூ. | பற்றுச் சீட்டு எண் |
|---|---|---|
| உரிமையாணைக் கட்டணம் | 107800.00 | 1501069 |
| கட்டிட பொருள் சேமிப்புக் கட்டணம் | 6000.00 | 1501069 |
| கட்டிடம் இடிப்பதற்கான கட்டணம் | | |
| சேவைக் கட்டணம் | | |
| பாதாளச் சாக்கடை பங்களிப்பு தொகை | 90000.00 | 122953 |
| சாலை அமைப்புக் கட்டணம் | 0.00 | |
| உள்கட்டமைப்பு அபிவிருத்திக் கட்டணம் | 0.00 | |
| அபராதக் கட்டணம் | 0.00 | |
| உள்ளூர்திட்ட குழுமம் அபிவிருத்திக் கட்டணம் | | |
| தொழிலாளர் நலநிதி கட்டணம் | 182800.00 | 4400 |

உத்திரவு :

1920–ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 200, 201–வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள 2வது மெயின் ரோடு,டி.டி.கே.நகர்,மேற்கு தாம்பரம்,செ தொகுதி. E பகுதி 5 நகரளவு எண் 6 & 7 உள்ள இடத்தை அஙகீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிடம் / மாறுதல் கட்டிடம் / கூடுதல் கட்டிடம் / புதுப்பித்துக் கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழஙகப் படுகிறது. அஙகீகரிக்கப்பட்ட வரைபடஙகளின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி / திருத்திய திருத்தப்பட்டபடி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளுக்கு 06/05/2015 தேதியிலிருந்து 05/05/2018 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமையாணை அளிக்கப்படுகிறது.

ஆணையர்
தாம்பரம் நகராட்சி

பெறுவர் :

திரு/ திருமதி. ஆர்.கோபால்
மெஸர்ஸ்.அச்சுதன் பில்டர்ஸ்
22,சரஸ்வதி தெரு, மகாலிஙகபுரம்

நகல் : நகரமைப்பு ஆய்வர் – கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க.
நகல்: வருவாய் ஆய்வாளர் – கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க.
நகல்: வருவாய் பிரிவு எழுத்தர்

## பொது நிபந்தனைகள்

1. இந்த அனுமதி 3 வருட காலத்திற்கு மட்டும் அமுலிலிருக்கும் இந்த கால அளவிற்கு கட்டிடம் கட்ட முடிக்கப்படவில்லையானால் அனுமதி காலம் முடிவதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக உரிமக்கட்டணம் செலுத்தி அனுமதி கால வரம்பை நீடித்துக்கொள்ளவேண்டும்.

2. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்படவேண்டும்.

3. ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் இருந்து எந்தவிதமான மாறுதலும் செய்யக்கூடாது

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்நது நகாராட்சிஆய்வு அலுவலர்கள் கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

5. பொதுத்தெருவை ஒட்டிக்கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5/8 அடிக்கு மேற்படக்கூடாது, கதவுகள் தெருப்பக்கம் திறக்கப்படக்கூடாது. தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்தவேண்டும்.

6) சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்படவேண்டும்,

7) அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது,

8) உறிஞ்சும் கழிவறை( Septic Tank Latrine) கட்டப்படவேண்டும்.

9) கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திற்கு குறையாமல் கைபிடிச்சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்படவேண்டும்.

10) ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீஙகலாக இருக்கவேண்டும்.

11) கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தஙகாமல் தடுக்கப்படவேண்டும்.

12) சமையல் அறைக்கு மேலே உள்ள கூரையில் புகைபோக்கி அமைக்கப்படவேண்டும் .

13) நகராட்சி துப்புரவு அலுவலரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் பெறுமுன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது.

14) கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகிவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினஙகளுக்குள் முடிக்கப்பட்ட இரண்டு வரைபடஙகளுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்கவேண்டும்.

15) மழைநீர் சேமிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டியுள்ளபடி அமுல்படுத்தப்படவேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டால் மனுதாரரின் கட்டிட அனுமதி உரிமம் ரத்தாவதோடு கட்டப்படும் கட்டிடம் இடித்து அப்புறப்படுத்தப்படும்.

ஆணையாளருக்காக
தாம்பரம் நகராட்சி

செ.பெ.வ.குழுமம் சடடபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் போன்ற பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை [illegible] மட்டுமே சரிபார்க்கப்படுகிறது அதன்மூலம் முதற்கட்டமாக [illegible] வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்[illegible].

சொத்தினை [illegible] விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரி[illegible] உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அரசோ [illegible] யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் மற்றும் நகராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| உறுப்பினர்–செயலர், | ஆணையாளர் |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், | தாம்பரம் நகராட்சி |
| 1, காந்தி–இர்வின் சாலை, | தாம்பரம் |
| எழும்பூர், சென்னை – 600 008. | சென்னை |

---

கடித எண் பி2/3946/2014 தேதி 31.12.2014

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – ஊக்கத் தளப்பரப்புடன் கூடிய திட்ட அனுமதி – பழைய நில அளவை எண் 60/1 (பகுதி) மற்றும் 5 (பகுதி), இரும்புலியூர் கிராமம் (பத்திரத்தின்படி), தற்போது நகர நில அளவை எண் 6 மற்றும் 7, பிளாக் எண் 5, வார்டு எண் E, தாம்பரம் டவுன் (பட்டாவின்படி), கதவு எண் 9, மனை எண்கள் 86 மற்றும் 87, இரண்டாவது பிரதான சாலை, T.T.K. நகர், தாம்பரம், சென்னை–45 இல் வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்களுடன் கொண்ட 12 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப் பிரிவு எண் 211/2014 இல் 10.3.2014 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.3.2012.
3. அரசாணை (பல்வகை) எண் 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 09.09.2009
4. அரசாணை (பல்வகை) எண் 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 30.12.2013.
5. வழிகாட்டி மதிப்பீடு கோருதல் குறித்து சார்பதிவாளர், தாம்பரம் அவர்களுக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 21.11.2014.
6. சார்பதிவாளர், தாம்பரம் அவர்களின் கடித நாள் 27.11.2014 பெறப்பட்ட நாள் 2.12.2014.
7 வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவது தொடர்பான இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 3.7.2014 மற்றும் 22.12.2014.
8. விண்ணப்பதாரர் கடித நாள் 25.7.2014 மற்றும் 30.12.2014.

***

பழைய நில அளவை எண் 60/1 (பகுதி) மற்றும் 5 (பகுதி), இரும்புலியூர் கிராமம் (பத்திரத்தின்படி), தற்போது நகர நில அளவை எண் 6 மற்றும் 7, பிளாக் எண் 5, வார்டு எண் E, தாம்பரம் டவுன் (பட்டாவின்படி), கதவு எண் 9, மனை எண்கள் 86 மற்றும் 87, இரண்டாவது பிரதான சாலை, T.T.K. நகர், தாம்பரம், சென்னை–45 இல் வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்களுடன் கொண்ட 12 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–7ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 7–இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, இரசீது எண்கள் 1525 SD/180, 1526, 1527 நாள் 24.7.2014 மற்றும் 3377 நாள் 30.12.2014–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.25,000/- | இரசீது எண் 1525 நாள் 24.7.2014. |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 1,500/- | |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.40,000/- | |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 3,50,000/- | இரசீது எண் SD/180 நாள் 24..2014. |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 12,000/- | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/- | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ.4,00,000/- | இரசீது எண் 1526 நாள் 24.7.2014. |
| ஊக்க தளப்பரப்பு கட்டணம் | ரூ.4,90,000/-<br>ரூ.3,80,000/- | இரசீது எண் 1527 நாள் 24.7.2014.<br>இரசீது எண் 3377 நாள் 30.12.2014. |
| மொத்தம் | ரூ.17,08,500/- | |

(ரூபாய் பதினேழு இலட்சத்து எட்டாயிரத்து ஐநூறு மட்டும்)

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதி஌ருக்கான வடிவமைப்புகள் வசதி இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. எண் பி/சிறப்புக் கட்டிடம்/ 290 /2014 நாள் 31.12.2014 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 31.12.2014 இருந்து 30.12.2017 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் ஆணையாளர், தாம்பரம் நகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருத்தியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

5/1/2015

உறுப்பினர்–செயலருக்காக.

5/1/15

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:1. திரு R. கோபால், M/s. அச்சுதன் பில்டர்ஸ்
எண் 22, பழைய எண் 15, சரஸ்வதி தெரு, 'லட்சுமி வராஉறம்'
மகாலிங்கபுரம், சென்னை–24

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority)
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

4. துணைதிட்ட அமைப்பாளர் (தெற்கு)
செயலாக்கப்பிரிவு, செ.பெ.வ.குழுமம், சென்னை–8.